# IMPACT OF USING MOBILE PHONE AMONG TEACHERS; SPECIAL REFERENCE WITH B/AL MURSHID MAHA VIDYALAYA

**Fathima Shameera Abdul Wahid[1], Sabaretnam Sajiharan [2]**

[1,2] Computer Unit, Faculty of Arts & Culture, South Eastern University of Sri Lanka

[1]shameerawahid77@gmail.com, [2] sabasajiharan@gmail.com

## Abstract

Mobile phone is one of the most usable communication medium in the modern world. There has been tremendous growth in the use of the mobile phones in all over the world by all age people. The mobile phones are available to the people right from the age of 12 years. Mobile phone has gained wider acceptability, usability and it is becoming a most popular communication tool among the teachers and students. The mobile phone technology has brought the world closer. It provided great convenience in communication among people by way of either calling or texting. Now, the mobile phones are coming up with variety of features like internet access, sending e-mails, games, access to social networking sites like face-book, listening to music, playing radio, reading books, dictionary and so on. I found that, nowadays most of the school teachers use mobile phones. Also it causes to students to addict to the phone. However, though the mobile phone provided many advantages, it has also caused some problems also. The main objective of this paper is to identify the needs and use of mobile phones and to make aware the teachers of problems and disadvantages of using mobile phones. We used primary and secondary data collection methods to do the research.

***Keywords***: *Mobile phone, Teachers, Usage*

### ஆய்வின் அறிமுகம்

இன்று உலகளாவிய ரீதியில் தொழிநுட்ப வளர்ச்சி ஒரு பிரமிப்பான நிலையிலனை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தொழிநுட்பம் பெறும் புரட்சிகரத் தன்மையோடு வெற்றியை நோக்கிச் கொடி கட்டிப் பரக்கின்றது. தகவல் கொடர்பு சாதனங்கள் என்பது கருத்தை அல்லது தகவலை ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு பரிமாற்றம் செய்ய உதவும் கருவிகள் எனக் குறிப்பிட முடியும். அத்தெடர்பாடலை கருவிகளின் வழி நாம் மேற்கொள்கின்ற போது அவை தொடர்பு சாதனங்களாகி விடுகின்றன. அத்தோடு இத்தொடர்பு சாதனங்களின் வழி பெறப்படும் தகவல் பரிமாற்றமானது எத்தகைய தடங்களும் இன்றி ஒருவரை சென்றடைகின்ற போது தான் அவை சமூகத்தில் பயனளிக்கின்றன. இத்தகவல் கொடர்பு சாதனங்களில் தொலைபேசி முக்கியத்துவம் பெறுகின்றது. மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக தகவல் பரிமாற்றம் திகழ்கின்றது. இத்தகவல் பரிமாற்றம் இல்லையேல் மனிதன் பூரணத்துவமான ஒரு மனிதனாக வாழ முடியாது.

மனிதன் ஒரு சமூகப் பிராணி என்ற நிலையில் சமூகத்தின் செல்வாக்கிற்கு உட்படாமல் அவனால் வாழ முடியாது. மொழி, பழக்கவழக்கங்கள், ஓழுக்க முறைகள், கருவிகளின் பயன்பாடு போன்ற அனைத்தையும் அவன் சமூகத்திலிருந்தே கற்றுக் கொள்கிறான். இதனால் இன்றைய தொழிநுட்ப யுகத்தினை கொண்ட சூழலில் கொடர்பு சாதனங்கள் ஒருவனது நடத்தையில் பலவாறாக செல்வாக்குச் செலுத்தும் தன்மையினை நோக்க முடியும்.

கையடக்கத் தொலைபேசி நமது சமூகத்தில் எங்கும் நிறைந்திருக்கிறது. ஏவ்விதத் தடைகளுமின்றி சமூகத்தின் எல்லாத் தரப்பினர்களுக்கு மத்தியிலும் பயன்படுத்தப்படுகின்றது. . இன்றைய சூழலில்

கையடக்கத் தொலைபேசியினை பயன்படுத்தாத, அறியாத சமூகம் இல்லை எனுமளவுக்கு அதன் ஊடுறுவல் காணப்படுகிறது. இன்று பெருகி வரும் புதிய தொழிநுட்பங்கள் மூலம் நினைத்தவுடன் அதே கணத்தில் அழைப்புக்களை மேற்கொள்ளவும், குறுந்தகவல்களை அனுப்பவும் பெறவும் முடிகின்றது. மேலும் விம்பங்களாகவும் ஒளி ஒலி முறைகளிலும் தகவல்களை வெளிக்கொணர்ந்து தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. பாடசாலை

ஆசிரியர்களின் அன்றாட வாழ்வியலில் செல்வாக்கு செலுத்தும் அம்சமாக கையடக்கத் தொலைபேசி காணப்படுகிறது. இவை இன்றைய பாடசாலை ஆசிரியர்கள் மத்தியில் சிந்தனை மையப் புள்ளியாக விளங்குகின்றது. ஆசிரியர்களின் அதிகரித்த மூகத்தொலைபேசி பாவணையே மாணவர்கனையும் அதன் பால் கவரும் ஒரு உந்துவிசையாக காணப்படுகிறது. அவர்களின் அன்றாட வாழ்வியல் அம்சங்களோடும் பண்பாடு, விழுமியம், நெறிமுறைகள், கலாசார அம்சங்கள், உணவு பழக்க வழக்கங்கள், உறவு முறைகள் என அனைத்திலும் பாரிய தாக்கத்தினைச் செலுத்துவதாக அமைந்துள்ளது. இன்று பாடசாலை ஆசிரியர்கள் தாமாகவே விரும்பியோ விரும்பாமலோ இக் கையடக்கத் தொலைபேசிகளின் ஆட்சிக்குள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு தம் நேரத்தைக் கடமைகளை மறந்து செயற்படுகின்ற அளவுக்கு சமூகத்தில் இதன் ஆக்கிரமிப்பு அதிகரித்து விட்டது. இவ்வாறு அவர்களின் வாழ்வியல் அம்சங்களில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதாக விமர்சிக்கப்படுகின்றது. மேலும் இதனால் வன்முறை மனப்பாங்குகளும் வளர்கின்றன. குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன. அதுமட்டுமன்றி பாடசாலை மாணவர்களையும் இதன்பால் கவரும் தூண்டுகோலாக இந்த ஆசிரியர்களின் கைத்தொலைபேசிப் பாவணை அமைநதுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே மேற்குறிப்பிட்ட வகையில் பாடசாலை ஆசிரியர்கள் மத்தியில் கையடக்கத் தொலைபேசி அவர்களது அன்றாட வாழ்வியல் அம்சங்களில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதை அறிய முடிகின்றது. இன்றைய நிலையில் கையடக்கத் தொலைபேசிப் பாவனை உலகளாவிய ரீதியில் பரந்துபட்ட விடயமாக காணப்படுகின்றது. போக்குவரத்து, பாதுகாப்பு கருதி பயன்படுத்தப்படும் கையடக்கத் தொலைபேசியே அவர்களை பல சமூகப் பிரச்சினைகளை எதிர்நோக்க வழி வகுக்கிறது.

கையடக்கத் தொலைபேசி தகவல் தொடர்பு சாதனங்களுள் மக்கள் மத்தியில் முக்கியமானதொரு சாதனமாக மாறியுள்ளது. இன்று உலகம் முழுதுமே கையடக்கத் தொலைபேசிகள் பாடசாலை ஆசிரிய, மாணவ சமூகத்தை தம் கைப்பிடிக்குள் வைத்துள்ளது. இதன் பாவனை பாடசாலை ஆசிரியர்கள் மத்தியில் அதிகரித்த நிலையில் நாகரீகம் என்ற போர்வையில் கலாசாரத்தினைச் சீரழிக்கும் தன்மையைக் கொண்டு காணப்படுகின்றது. அதற்கு அடிமையாகி விடாது திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் கல்வியிலும் ஆளுமை விருத்தியிலும் சிறந்ததொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

**முன்னைய ஆய்வுகளின் மீளாய்வுகள்**

இவ்வாய்வுக்காக பல இலக்கிய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வின் வரையறை கருதி மிக முக்கியமாக இவ்வாய்வுக்குப் பயனுடையதாக அமைந்த ஒரு சில இலக்கிய மீளாய்வுகள் இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அந்த வகையில் Klyoko Kamibeppu, R.N., Ph.D. And Hitoml Sugiura, R.N. (2005) என்பவர்கள் கையடக்கத் தொலைபேசிகளின் தாக்கங்கள் என்ற ஆய்வினை டோக்கியோ பெருநகரின் சிரேஷ்ட, கனிஷ்ட மாணவர்களின் நட்புறவை மையமாகக் கொண்டு ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். டோக்கியோ பெருநகரின் 651 சிரேஷ்ட, கனிஷ்ட மாணவர்களை மையமாக கொண்டு செய்யப்பட்ட இவ்வாய்வில் கையடக்கத் தொலைபேசி பாவணையால் ஏற்படும் சாதக பாதகங்களைக் கூறி பின்னர் கையடக்கத் தொலைபேசிகளின் அதிகரித்த பாவணையால் மாணவர்களிடத்தில் ஏற்படுத்தப்படும் உளவியல், சுகாதார மற்றும் மனோரீதியான தாக்கங்கள் குறித்து கூறியுள்ளனர். ஆய்வின் இறுதியில் மாணவர்கள் கையடக்கத தொலைபேசிகளில் அடிமையாவதைத் தடுக்க வேண்டும் என்ற கருத்தையும், பரிந்துரைகளையும் முன்வைக்கின்றனர். Kowalski, And Susan P. Limber. (2007). என்பவர்களின் நடுத்தர பாடசாலை மாணவர்களும் மின்னனுக் கொடுமைப்படுத்தலும் என்ற ஆய்வில் 3767 அமெரிக்க நடுத்தர பாடசாலை மாணவர்களை மையமாகக் கொண்டு ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். மின்னனு தொடர்பாடல் தொழிநுட்பம் மாணவர்களை மாத்திரமின்றி வயதானவர்களைக் கூட மின்னனுக் கொடுமைப்படுக்குட்படுத்தி அழிப்பதாகக் கூறுகின்றனர். மேலும் தற்போது இம் மின்னனுக் கொடுமைப்படுத்தலுக்குள் அதிகமாக பாடசாலை மாணவர்கள் மின்னஞ்சல், குறுந்தகவல், இணையத்தளப் பாவணை என்பவற்றை பயன்படுத்துவதனூடாக உட்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர். ஆய்வின் இறுதியில் பாடசாலை மாணவர்கள் மின்னனு தொடர்பாடல் தொழிநுட்பங்களைப்

பாவிப்பது விரும்பத்தக்கதல்ல என்றும் இது தொடர்பில் பெற்றோர், ஆசிரியர்கள், இளைஞர்கள், வயதுவந்தவர்கள் என அனைவரும் இது தொடர்பில் மாணவர்களை விழிப்புணர்வூட்ட வேண்டும் எனவும் பரிந்துரையாக முன்வைத்துள்ளனர்.

Ranwei, Ven-Hweilo (2006) என்பவர்கள் கையடக்கத் தொலைபேசியும் சமூகத் தொடர்பும் என்ற தலைப்பில் தாய்வான் கல்லூரி மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ள கையடக்கத்தொலைபேசிகளை பயன்படுத்துகின்றனர். இத் தொலைபேசி பாவணை இன்றைய காலத்தின் இன்றியமையாத தேவையாகவும் உள்ளது. இவ்வாய்வுக்காக முதலாம் இரண்டாம் நிலைத் தரவுகளின் அடிப்படையில் பகுப்பாய்விலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட முடிவுகளின் படி தொலைபேசி(fixed lines) குடும்பங்களுடன், உறவினர்கள், அயலவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் உறவுகளைப் பேணிக் கொள்ளவும், கையடக்கத்தொலைபேசிகள் வியாபாரிகள் அதிகமாகப் பயன்படுத்துவதாகவும் கூறகின்றனர். மேலும் கல்லூரி மாணவர்கள் கையடக்கத்தொலைபேசிகளை அதிகமாகப் பயன்படுத்துவதோடு அதற்கு அடிமையாக உள்ளனர் எனறும் கையடக்கத்தொலைபேசிகளை பயன்படுத்துவதன் சாதக பாதகங்களை எடுத்துக் கூறியுள்ளதோடு ஆய்வின் இறுதியில் கையடக்கத்தொலைபேசிகளில் கல்லூரி மாணவர்கள் தங்கியிருக்கும் நிலையினை இல்லாதொழிக்க வேண்டும் என கூறியுள்ளதோடு அதற்கான சில பரிந்துரைகளையும் முன்வைக்கின்றனர்.

Ranwei,(2006) என்பவரின் தொடர்பாடல் மற்றும் பொழுதுபோக்கிற்காக கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தல் என்ற ஆய்வில் இனையத்தளப் பாவனை, புதிய விடயங்களைத் தேடுதல், இணைய விளையாட்டு, மற்றும் இணையத்தில் அரட்டை போன்றவற்றுக்காக இளைஞர்கள் அதிகமாக கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதாக தெரிவித்துள்ளதோடு தற்காலத்தில் உயர் தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் கையடக்கத் தொலைபேசிகள் அதிக வசதிகளைக் கொண்டுள்ளதோடு அதிக செலவின்றி பெற முடிகின்றமையும், எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்ல முடிகின்றமையும் தான் கையடக்கத் தொலைபேசிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதற்கான காரணங்கள என் கூறுகின்றார்.

**ஆய்வுப் பிரச்சினை**

சமூக வாழ்வின் அம்சங்களோடு பிரச்சினைகள் பின்னிப்பிணைந்துள்ளன. சமூகத்தில் பிரச்சினைகள் எப்பொழுதும் தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றன. அவ்வகையில் இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பாடசாலை ஆசிரியர்களும் அககரித்த கையடக்கத்தொலைபேசிப் பாவணையும் எனும் விடயம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வாழ்வில் பல பிரச்சினைகளையும், சீர்கேடுகளையும் ஏற்படுத்தியுள்ளமை இனங்கானப்பட்டுள்ளது. ஆவ்வகையில் இவ்வாய்வானது சில்மியாபுர கிராமத்தின் அல் முர்ஷிட் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர்களை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அண்மைக் காலமாக சில்மியாபுர பிரதேச பாடசாலை மாணவர்கள் மத்தியில் கையடக்கத்தொலைபேசிகளின் பாவணை அககரித்த நிலையில் காணப்படுகின்றமை இனங்கானப்பட்டன. பாடசாலை மாணவர்களின் அதிகரித்த கைத்தொலைபேசிபாவணையில் ஆசிரியர்களின் வகிபங்கு மற்றும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் அதிகரித்த கைத்தொலைபேசி பாவணையால் ஏற்படும் பாதகமான தாக்கங்களை அடையாளம் கண்டு அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்தலை ஆய்வுப் பிரச்சினைளாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தரவும் தரவுப் பகுப்பாய்வும்**

ஆய்வினைச் சிறப்பாக எடுத்துச் செல்ல காரணமாகவுள்ள தரவு முறையியலானது ஆய்வின் முக்கிய பகுதியாக உள்ளது. இங்கு தரவுகளின் வகை, தரவு சேகரிக்கும் முறை, தரவுப் பகுப்பாய்வு முறை என்பன பயன்படுத்தப்படுகின்றன. ஆந்த வதையில் இவ்வாய்வானது விவரணப் புள்ளி விபரவியல் முறை சாரந்த ஆய்வாகும். இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் மொத்தத் தொகை 60 ஆகும். இவர்களுள் குறித்த பாடசாலையினுடைய 36 ஆசிரியர்களும் 24 சாதாரண மற்றும் உயர்தர மாணவரகளும் அடங்குவர்.

இவ்வாய்வுக்கு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகள் அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதனுள் அளவு மற்றும் பண்பு ரீதியான தரவுகள் உள்ளடக்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட 60 ஆசிரியர்கள் மற்றும் மாணவர்ளுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. ஆத்தோடு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள்

நலன்விரும்பிகளிடமிருந்து நேர்காணல், குழுக்கலந்துரையாடல்கள் மற்றும் அவதானிப்பு முறைகள் மூலம் பண்பு ரீதியான தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக இவ்வாய்வுப் பிரச்சினை தொடர்பாக இவ்வாய்வுப் பிரதேசத்தில் எவ்வித புத்தகங்கள், சஞ்சிகைகள் எதுவும் இதுவரை வெளிவந்திராத காரணத்தினால் பாடசாலை மாணவர்கள் இடைவிலகல் அறிக்கை, ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளம், பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றன மூலம் தரவுகள் பெறப்பட்டன. இவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளானது கணனி மூலம் குறிப்பாக Excel package மூலம் எளிய புள்ளிவிபரவியல் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

**ஆய்வின் நோக்கங்கள்**

I. ஆசிரியர்கள் கைத்தொலைபேசிகளை பயன்படுத்துவதற்கான காரணங்களைக் கண்டறிதல்.
II. ஆசிரியர்களின் அதிகரித்த கைத்தொலைபேசி பாவணையால் ஏற்படும் பாதகமான தாக்கங்களை அடையாளம் காணல்.
III. அடையாளம் காணப்பட்ட பாதகமான தாக்கங்களை கட்டுப்படுத்த சில பரிந்துரைகளை முன்வைத்தல்.

**ஆசிரியர்கள் கைத்தொலைபேசிகளை பயன்படுத்துவதற்கான காரணங்களைக் கண்டறிதல்.**

ஆசிரியர்கள் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துவதற்கான, காரணங்களாக பின்வருவன கண்டறியப்பட்டன. கல்வித்தேவை, இலகுவாக புதிய பாடத்திட்டம்இ குறிப்புக்கள், பரீட்சை வினாத்தாள்கள் போன்றவற்றைப் பதிவிறக்கம் செய்தல், அவற்றை ஏனைய ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல், கல்வித்தேவை, இலகுவாக புதிய பாடத்திட்டம் ஏனைய பாடசாலை ஆசிரியர்களுடனான கலந்துரையாடல்கள், வினாத்தாள்கள், குறிப்புக்கள் என்பவற்றைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் புதிய தகவல்களை மாணவர்களுக்கு வழங்குதல் போன்ற மிக முக்கியமான காரணங்களோடு பின்வரும் துணைக் காரணங்களும் கண்டறியப்பட்டன.

ஏனைய துணைக் காரணங்களாக பொழுதுபோக்கு, இணைய பாவணை, தொடர்பாடல், இணையத்தில் அரட்டை, சமூகவலைதலப் பாவணை, இலகுவில் குறுந்தகவல் (sms), மற்றும் மின்னஞ்சல் ( e-mail) அனுப்பவும், பெறவும் முடிதல், குறைந்த செலவில் அதிக பயன் பெற முடிதல், புகைப்படம் எடுத்தல், audio, video call வசதி (imo, watsapp, viber, line) gps சேவைகள், இணைய வங்கி சேவைகள் online banking, check account balance, record videos, விரும்பிய அனைத்து apps களையும் உடனுக்குடன் பதிவிரக்கம் செய்ய முடிகின்றமை , சுகாதார சேவைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற முடிகின்றமை e- channeling, தனிமையில் போக்குவர்த்து செய்யும் போது பாதுகாப்பிற்காகவும், அவசர தேவைகளின் போது தொடர்பு கொள்வதற்காகவும், தூரத்திலுள்ள நண்பர்களுடன் உறவாடல், திரைப்படம், பாடல்கள், தொடர்கதைகள் போன்றவற்றை பார்ப்பதற்கும், பயன்படுத்துவதோடு கையடக்கத் தொலைபேசிகளை வைத்திருப்பது சுய கௌரவமாக நினைப்பதனாலும், நாட்டின் மற்றும் உலகின் மூலை முடுக்குகளெங்கும் நடைபெறும் விடயங்களை தன் கைக்குள்ளிருந்தே உடனுக்குடன் அறிந்து கொள்ளவும், பிறருக்கு அறிவிக்கவும் முடியும் என்பதாலும் ஒரே நேரத்தில் ஒரே விடயத்தை பலருக்கு அனுப்பவும் பதில்களைப் பெறவும் முடியும். போன்ற இன்னோரன்ன சாதகமான காரணங்கள் கண்டறியப்பட்டன.

**ஆசிரியர்களின் அதிகரித்த கைத்தொலைபேசி பாவணையால் ஏற்படும் பாதகமான தாக்கங்களை அடையாளம் காணல்.**

ஆசிரியர்கள் கைத்தொலைபேசி பயன்படுத்துவதால் ஏற்பட்ட தாக்கங்களாக் குறித்த ஆசிரியர்களது பிள்ளைகள் கல்வியில் ஈடுபாடு குறைவு, வீட்டு வேலைகளை செய்யாமை, சிறந்த ஆழுமையை விருத்திசெய்யக் கூடிய பொழுதுபோக்குகள் இன்மை, உடல் உள சோர்வு, மண ரீதியில் பாதிக்கப்படல் இணையப் பாவனையால் புத்தக தேடுதல் குறைவு, கைத்தொலைபேசி

விளையாட்டுகளுக்கு அடிமையாதல், போன்ற பாதகமான தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளதோடு பாடசாலையில் தன் வகுப்பில் உள்ள ஏனைய மாணவர்களுக்கும் தான் வீட்டில் பெற்றோரின் அனுமதியுடனோ அல்லது களவிலோ தான் கைத்தொலைபேசியில் செய்கின்ற அல்லது பார்க்கின்ற அனைத்து விடயங்களையும் பகிர்ந்து கொள்வதனால் ஏயைன மாணவர்களையும் மேற்கூரிய பாதகமான தாக்கங்களுக்கு ஆளாக்குவதோடு துர்நடத்தை, பண, நேர வீண்விரயம் கல்வியில் இடைவிலகல், சரியான நேரத்துக்கு தூக்கமின்மை, சரியான நேரத்துக்கு உணவினை உட்கொள்ளாததால் உடல் நலம் குன்றுதல், கண் நோவு, முதுகு வலி என்பன ஏற்படல், குடும்ப உறவினர்களுக்கு இடையிலான இடைவெளி அதிகரித்தல், காதல் வயப்படல், ஆபாச படங்களைப் பார்த்தல், அறிமுகமற்றோருடனான தொடர்பு அதிகரிப்பதோடு அறிமுகமானவர்களுக்கிடையிலான தொடர்பு அருகுதல், அன்னியக் கலாச்சாரத் தாக்கம் ஊடுறுவல், கல்வியைப் பூரணப்படுத்தாமல் இடைவிளகுவதால் சிறந்த தொழில் வாய்ப்புக்களைப் பெற முடியாமல் போதல், இதனால் மது, போதை, களவு, கொலை, கொள்ளை போன்ற வன்முறைகளில் ஈடுபடல் போன்றன பாதகமான தாக்கங்களுக்கும் உட்படுகின்றனர்.

இதன் மூலம் ஆசிரியர்களின் அதிகரித்த கைத்தொலைபேசி பாவணையானது அவர்களது பிள்ளைகனை மட்டுமல்ல முழு மாணவ சமூகத்திலும் தாக்கம் செலுத்துகின்றமை அடையாளம் காணப்பட்டது.

**அடையாளம் காணப்பட்ட தாக்கங்களை கட்டுப்படுத்த சில பரிந்துரைகளை முன்வைத்தல்.**

கையடக்கத் தொலைபேசி பயன்பாட்டால் ஏற்பட்ட தாக்கங்களாக அடையாளம் காணப்பட்ட பாதகமான தாக்கங்களை குறைப்பதற்காக பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. ஆசிரியர்கள் தங்களுடைய பிள்ளைகள் மற்றும் மாணவர்களுக்கு கைத்தொலைபேசி பாவனையால் ஏற்படும் தாக்கங்களைப் பற்றி எடுத்துரைத்தல், விழிப்புணர்வூட்டல், அவ்வாறான தாக்கங்களை அவர்களால் அதிகம் பயன்படுத்தப்படும் சமூக வலைகளங்களைப் பயன்படுத்தியே காட்சி ஒலிப்படங்கள் மூலமாக எடுத்துரைத்தல். ஏனெனில் கண்டிப்பதனாலோ, தண்டிப்பதனாலோ பிழைகளைத் திருத்த முடியாது. பெற்றோர் தம் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்பதை கவனித்தல், அத்தோடு பாடசாலை நேரங்களிலும், வீட்டிலிருக்கும் போது தங்களுடைய பிள்ளைகளின் முன்னாலும் கைத்தொலைபேசி பாவணையைக் குறைத்தல், இலங்கை அரசு முன்வைத்துள்ள பாடசாலை நேரங்களில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்தக் கூடாது என தடை செய்த சட்டத்தை அமுல்படுத்தி அதற்கெதிரான தண்டனைகளையும் வழங்க வேண்டும் என்பதோடு அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இது தொடர்பில் அதிக கரிசணை காட்ட வேண்டும் என்பன பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டன.

**முடிவும் கலந்துரையாடலும்**

இவ்வாய்வின் மூலம் ஆசிரியர்கள் மத்தியில் கையடக்கத் தொலைபேசிகளின் எவ்வளவு தூரம் ஆதிக்கம் செலுத்துகின்றன அதன் வகிபங்கு என்பன தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அத்தோடு ஆசிரியர்களிடத்திலான கையடக்கத் தொலைபேசிகளின் பாவணை மாணவர்கள் மத்தியில் எவ்வளவு தூரம் ஆதிக்கம் செலுத்துகின்றன இதனால் பாடசாலை மாணவர்கள் கையடக்கத் தொலைபேசி பாவணையால் எவ்வாறான பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர் என்பதை மையமாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளின் அடிப்படையில் பெறப்பட்ட முடிவுகளின் படி தவகல் தொடர்பு சாதனங்களில் கையடக்கத் தொலைபேசி சிறப்பான ஓர் இடத்தை தக்கவைத்துள்ளது. இதன் அதிகரித்த பாவணையை பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடத்தில் திடீரெனக் கட்டுப்படுத்த முடியாது. எனவே பாடசாலை மாணவர்களின் கல்வி நலன்களையும் சுமூக அக்கறையையும் கருத்திற் கொண்டு ஆசிரியர்கள் கையடக்கத் தொலைபேசிகளை பாடசாலைக்கோ பிரத்தியேக வகுப்பிற்கோ எடுத்துச் செல்வதை சட்ட ரீதியாக தடை செய்ய வேண்டும். இதனால் சமூகப் பிரழ்வுகளையும், அதன் தாக்கங்களையும் ஓரளவேனும் குறைக்கலாம். இன்றைய நிலையில் கையடக்கத் தொலைபேசி பாவனை உரகளாவிய ரீதியில் பரந்துபட்டு காணப்படுகிறது. தேவைக்குப் பயன்படுத்தும் நிலை மாறி நேரம், கல்வி, ஆரோக்கியம் போன்றன பாதிக்கப்படும் அளவுக்கு அதன் பாவனை மாறிவிட்டது. இவ்வாய்வின் முடிவில் இக்கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதால்

இப்பிரதேச மாணவர்களிடையே கண்டறியப்பட்ட தாக்கங்களை முழுதளவிலே இல்லாமல் செய்ய முடியாவிட்டாலும் அவற்றைக் குறைப்பதற்காக் கைத்தொலைபேசி பாவனையால் ஏற்படும் தாக்கங்களைப் பற்றி எடுத்துரைத்தல், விழிப்புணர்வூட்டல், பெற்றோர், ஆசிரியர், அதிபர் போன்றோர் இது விடயத்தில் கூடிய கரிசணை காட்டல் வேண்டும் என்பன மாணவர்களின் எதிர்காலம் கருதி பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டன.

**References**


- Klyoko Kamibeppu, R.N., Ph.D. And Hitoml Sugiura, R.N. (2005). Impact of the Mobile Phone on Junior High-School Students' Friendships in the Tokyo Metropolitan Area. *Cvberpsychot OGY & BEHAVIOR.* Volume 8, Number 2, 2005. PP. 121-130
- Nicholas D. Lane, Emiliano Miluzzo, Hong Lu, Daniel Peebles, Tanzeem Choudhury, And Andrew T. Campbell, (2010). A Survey of Mobile Phone Sensing. *IEEE Communications Magazine, September 2010.* PP 141-150
- Ran Wei Ranwei,Motivations for using the mobile phone For mass communications and entertainment. *Telematics and Informatics 25 (2008).* PP. *36–46*
- Ran-Wei and Ven-Whei Lo. (2006) Cellphone Use and Social Connectedness. New Media & Society. Copy Right © (2006).SAGE Publications London. Thousand Oaks, CA And New Delhi Vol8(1): PP. 53-72 [DOI10-1177/1461444806059870]
- Robin M. Kowalski, And Susan P. Limber. (2007). Electronic Bullying Among Middle School Students. *Journal of Adolescent Health 41 (2007).* PP S22–S30
- Tasuku Igarashi, Tadahiro Motoyoshi, Jiro Takai, Toshikazu Yoshida. (2008). No mobile, no life: Self-perception and text-message dependency among Japanese high school students. *Computers in Human Behavior 24 (2008)* PP. 2311–2324